# விடியல்

The Dawn

இதழ்-109, மே -2018

**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
திரு. செ.தங்கராஜ்
திரு.மு.சதீஸ்குமார்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. து.சூசைபிரகாசம்
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா

## உழைப்பாளர் தினம்

## உழவை உயர்வு செய்

ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை கொண்டிருக்கும் அடிப்படையான, அத்தியாவசியமான செயல் உழைப்பு. இன்றைய உலகின் உயர்நிலைக்குக் காரணம் உயிர்களின் உன்னதமான உழைப்பு. உழைப்புக்கு உதாரணமாக பகலவன் முதல் பல்வேறு இயற்கைப் பொருட்களையும், அ∴றிணை உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை அடையாளம் காட்டுவர் ஆன்றோர்.

ஆதிமனிதன் கண்டுபிடித்த உழவுத் தொழில் முதல் உலகை அச்சாணிக் கொம்பில் ஏற்றும் உயர் அறிவியல் நுட்பம் வரை உழைப்பின் வகை பலவாகும். முன்னேற்றம்

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

என்பதெல்லாம் உழைப்பவர் உழைப்பதனாலே என்ற பாடல் வரி உழைப்பின் பெருமையை முன்னேற்றம் குறித்து எளிமையாய் எடுத்துரைக்கிறது.

பண்டைத் தமிழர் உழைப்பையே வரித்திருந்தார்கள். உழைப்பதையே பெருமையாக எண்ணியிருந்தனர். இன்று பிறர் உழைப்பைத் திருடுவதைக் கூட உழைப்பு என்கின்றனர். அதனால் தான் உழைப்புத் திருடர்கள் விரைவில் உயர்கிறார்கள். உழைப்பவர்கள் உழைப்பதோடு நின்றுவிடுகின்றனர்.

இந்நிலை மாறி உழைப்பவர் உயர வேண்டும். அறிவு சார்ந்த உழைப்புக்கு ஈடாக உடல் உழைப்பும் ஏற்றம் பெற வேண்டும். மனிதம் மதிக்கப்பட வேண்டும். உலகோர்க்கெல்லாம் உணவு படைக்க உழவன் உழைக்கிறான். ஆனால் உழைப்புக்கேற்ற உயர்வு உழவனுக்கு மட்டும் இல்லை. பொருளாதார சித்தாந்தங்கள் அனைத்துத் தொழில்களுக்கும் பொதுவாக வேண்டும்.

ஓர் உடல் நலமாக இருக்க அனைத்து உறுப்புகளும் சரியாகச் செயல்படுவது போல, நாடு நலமாக இருக்க அனைத்துத் தொழில்களும் சமமாகப் போற்றப்பட வேண்டும். சமநிலை சரிந்து போனால் சமூகம் சலனப்படும். உழவே உலகின் அடிப்படைத் தொழில் என்பதை,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்"**

எனும் குறள்வழி வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

இனிவரும் உழைப்பாளர் தினம் உழவர்களையும் போற்றும் நாளாக, உழவையே போற்றும் நாளாக அமைய வேண்டும். **'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'** என்ற சங்கப்புலவன் வாக்கை இன்றைய நாளிலாவது சிந்திப்போம். செயல்படுவோம்.

**-ஆசிரியர்**

உழைப்பாளர் தினம் மே – 5

கவிதைகள்………….. 4 - 23

கல்வெட்டியல்………. 24–25

பொன்மொழி………… 25

பெரியாரின் சுவரொட்டி… 26

பத்து கட்டளைகள்……. 27-28

கவிதைகள்……………. 28 -32

# கவிதைகள்

## மழை

மேள தாளத்தோடு வானில்
இருந்து வருது இடி..
மின்னல் காற்று சுழன்று வீசி
மழையும் பொழியுது
ஏரி குளங்கள் நீர் நிரம்பி
இன்பம் ததும்புது எங்கும்!!
இஞ்சி மஞ்சள் நெல்லும்
கரும்பும் கொஞ்சி ஆடுது....
வானம் எங்கும்
விழாக் கோலங்கள்
வானம் முழுவதும்
தோரணம் நாட்டி
மின்னல்கள்
வண்ணப் பூவினை
சூடிக் கொண்டாள்
வான்மகள் திருமணத்திற்கு
அழைப்புத்தர வந்தன
மழைத்துளிகள்.....

மு. உமாராணி
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## வாழ்க்கை

பேசித் தீருங்கள்
பேசியே வளர்க்காதீர்கள்
உரியவர்களிடம் சொல்லுங்கள்
சங்கடமாய் இருந்தாலும்
சத்தியமே பேசுங்கள்
எதிர்தரப்பும் பேசட்டும்
என்னவென்று கேளுங்கள்
சீக்கிரம் தீர்வு வரும் பாருங்கள்
யாரோடும் பகையில்லாமல்
புன்னகைத்து வாழுங்கள்
ஏனென்றால்
வாழ்க்கை குறுகியது
மிகவும் அழகானது, வாழ்க்கை
அதை நேசித்து வாழுங்கள்

தனசேகர்
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## அன்பு

உங்களிடம் உண்மையான அன்பு
வைத்திருக்கும்
யாராவது தவறு செய்தால்
மன்னித்து விடுங்கள்
இல்லையேல் சொல்லிவிடுங்கள்

வெறுத்து விடாதீர்கள்
வெறுப்பைத் தாங்கும் சக்தி
நிச்சயம் அவர்களுக்கு இருக்காது
அந்த வலி
உங்களுக்கும் புரியாது
அன்பைத் தருபவர்களுக்கு
கண்ணீரைப் பரிசளிக்காதீர்கள்

சு. வினிதா
இளங்கலத்தமிழ் இரண்டாமாண்டு

## காதல்

இதயம் உயிரற்றுப் போனதடி
உன் பஞ்சு மேனியில்
பரந்து கிடந்த
சேலையினைக் கண்டவுடன்
நித்தமும்
நிலையற்றுப் போனதடி எனக்கு
உன் மேனி காயம் பட்டு விடுமோ
என்ற பயத்தினால்
கட்டளையிடு... என் தேவதையே
உன் பஞ்சு மேனியில் படர
முல்லைப் பூக்களுக்கு
உத்தரவு பிறப்பிக்கின்றேன்

சு. வினிதா
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

# விழித்திரு

ஆந்தையைப் போல விழித்திரு
எருதைப் போல பொறுமையாய் இரு
எறும்பைப் போல சுறுசுறுப்பாய் இரு
கவரிமான் போல தன்மானம் கொண்டிரு
காளையைப் போல உழைத்திரு
காகத்தைப் போல பகிந்துக்கொள்
கிளியைப் போல இனிமையாய் பேசு
குருவியைப் போல சேமி
சிங்கத்தைப் போல தைரியமாய் இரு
தேனியைப் போல சுறுசுறுப்பாக இரு
நாயைப் போல நன்றியுடன் இரு
பசுவைப் போல சாதுவாயிரு
பருந்தைப் போல கூர்மையாய் இரு
புலியைப் போல கவுரவமாய் இரு
யானையைப் போல பலமாய் இரு

ச. கோகுல்ராஜ்
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

# தாய்

தாய் நினைவு இருக்கும் வரை
எமன் கூட உன்னை
ஒன்றும் செய்ய முடியாது
ஆனால்

அவளை மறந்த பின்பு
கடவுள் கூட உன்னைக்
காப்பாற்ற முடியாது....
அவள் தான்
உண்மையான தாய்

க. ரஞ்சூரியா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## நண்பன்

தேடாத விழியால்
காணாத காட்சியாய்
என்றென்றும்
உன்முகம் எனக்குள்
எல்லா வலிகளையும் விட
ஒரு நண்பன்
நம்மிடம் பேசாத
வலிகள்தான் அதிகம்....
தூக்கத்தில் வந்த
கனவை மறக்கலாம்
ஏக்கத்தில் தவித்த
நண்பனை மறக்க முடியாது.....

செ. ஜெயசூர்யா
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

# நட்பு

நான் சோர்வுற்ற போது
என்னைத் தாங்கிக் கொண்டாய்
நான் உரிமையோடு
சாய்ந்து கொள்ள
தோள் கொடுத்தாய்.....
நான் துவண்டுபோன
தருணங்களில் என்னைத்
தூக்கி நிறுத்தினாய்
பேசாமல் துரத்திய போதும்
பேசியே என்னுடன்
நட்பு பாராட்டினாய்
வலிகள் உனக்கு ஆயிரம்
தந்த போதும்
தாயாய் நின்று
என்னைத் தாங்கினாய்
என் நட்பு
மாணிக்கம் போன்றது
பரிசுத்தமானது.......

செ. ஜெயசூர்யா
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## அன்பு

காணாமல் கண்ட
  கனவு இது
உறவை அள்ளித்
  தந்த அரவணைப்பு
பூவாய் மலரும்
  புது வாழ்வு....
புன்னகை சிலிர்க்கும்
  பூக்கள் இது....
அன்பில் கட்டிப்போட்டு
  கண்ணைத் திறந்து
புது வாழ்வு
    அமைந்த புது உறவு இது......

அ. சிவக்குமார்
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## மரணம்

மரணம் ஒரே ஒரு
நொடியில் நிகழ்வது
அதற்காக மற்ற
நொடிகளை ஏன்
நொடிக்கச் செய்ய வேண்டும்?
ஆபத்துக்களுடன் வாழ்வதைத் தான்

ஒவ்வொரு உயிரினமும் விரும்புகிறது
மனிதனைத் தவிர..
மனிதா மரணத்தை நேசி.

கோ. தமிழ்ச்செல்வி
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## மரம்

மரமே புனிதமானது தான்
அது காற்றையே ஹோமப் புகையாகவும்
மழையை மங்கள தீர்த்தமாகவும்
அனுப்பும் மகத்தான
மண்ணின் சீதனம்
இயற்கையின் நூதனம்
இருத்தலின் சாதனம்
இயற்கையே இறைவனின் சீதனம்.....

கோ. தமிழ்ச்செல்வி
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## சுதந்திரம்

பறந்த பட்டாம் பூச்சியின் சுதந்திரம்
ஓடி ஓடித் திரிந்து
இமை கொட்டாமல் கவனித்து
தேன் குடிக்கும்
அந்த நேரமாகப் பார்த்துப்

பிடித்தேன் பட்டாம் பூச்சியை…..

முள் தைத்து

விரல் ரணமாகி

இப்போது வலித்தது

மூடித் திறந்து

மூடும் கைகளில் கர்வமாய்

எத்தனை வண்ணம் என்ன வேகம்

நசுக்கி விடுவாளோ பதப்படுத்தி

குண்டூசி செருகிப் பாதுகாப்பாளோ

பூவருகே விடுவாளோ

தூசிக் கால்களை வண்ணத்துகள்கள்

கொண்டு வர்ணம் பூசியது

சிறகை அசைத்துப் பார்த்தது

பறத்தலுக்கான

கடைசி முயற்சியாய்

கடைசியில் விட்டுவிட்டேன்

அதைப் பூவருகே…..

கோ. தமிழ்ச்செல்வி

இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## எதிர்நீச்சல்

கவியின் ஊற்று அல்ல நான்

அதில் சிதறும் சிறுதுளி நான்!!

கற்பனைக்கும் எட்டாத் திறமை

எம்முள் புதைந்துள்ளது

செயலற்றுப் போகிறேனோ? - ஆம்
காரணம் அறியாமல்
விடை தேடி அலைகிறேன்
பல நாட்கள் காற்றாய் கரைந்தன – எமக்குள்
பல எண்ணங்கள்
சிறகடித்துப் பறந்தேன்...
திக்கு திசையின்றி அலைந்தேன்
வாழ்க்கையோ கரைந்தது
கற்பூரத் துகளைப் போல
சாதிக்க வேண்டுமென்ற வெறி என்னுள்
திறமை இல்லாமல் அல்ல
வாய்ப்புக் கிடைக்காமல்
வாழ்க்கை என்னும் அலையில்
கட்டுமரமாக நான் துடுப்புகள் போட்டும் பயனில்லை
அலை செல்லும் திசையிலே
காத்திருக்கிறேன் ஏக்கத்தோடு
வழியில்லாமல் வலிகளோடு....

ர. ரவின் சக்ரவர்த்தி
இளங்கலை மூன்றாமாண்டு ஆங்கிலம்

## அம்மா

கல்லாய் இருந்த என்னை
சிலையாய் செதுக்கினாய்
கரியாய் இருந்த என்னை
வைரமாய் உருவாக்கினாய்

வற்றிய வாய்க்கலாய்
இருந்த என்னை

வற்றாத நதியாக்கினாய்
துன்பத்தை எல்லாம் நீ
எடுத்துக் கொண்டு
இன்பத்தை மட்டும்
எனக்களித்தாய்.... இதற்கு
ஈடாய் எதைத் தருவேன்
“அம்மா” என்று
அழைப்பதைத் தவிர
வேறு ஒன்றும் இல்லை...

வே. கமல்ராஜ்
I – BCA – C

## அம்மா

மாதா பிதா குரு தெய்வம் சொல்லித் தந்தவள் நீ அம்மா
நீ சொல்லாமல் இருந்திருந்தால்
தெய்வமும் இல்லாமல் போயிருக்கும்
எது சுதந்திரமென்று என்னிடம் பார்....பெண்ணை
நசுக்கிய காலமெல்லாம் நடுங்கியோடட்டும்
ஏட்டளவில் இருந்ததெல்லாம் எழுந்தோடட்டும்
புரையோடிய பொய்மையெல்லாம் புரண்டோடட்டும்

உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உண்டு
ஒன்று தாயின் கருவறை
இன்னொன்று ஆசிரியரின் வகுப்பறை
தாயின் கருவறையில் ஒருவன்
உயிரைப் பெறுகிறான்
ஆசிரியரின் வகுப்பறையில்
அவன் அறிவைப் பெறுகிறான்

மு. உமாமகேஸ்வரி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## பெண்மை

உலகில் அழகாய் பூத்தவள் அன்னை
அமைதியாக வளர்ந்தவள் தங்கை
அணைக்கும் உரிமை உள்ளவள் அக்கா
ஆனந்தமாக இருப்பவள் தோழி
அன்னை என்பவள்
என் மகிழ்ச்சியைப் பார்ப்பவள்....
தங்கை என்பவள்
என் பாசத்தைப் பார்ப்பவள்
அக்கா என்பவள்
என் அன்பிற்கு உகந்தவள்
தோழி என்பவள்
என் உயிருக்கு மேலானவள்
அன்று அடுப்படியில் அமர்ந்தவள்
இன்று அனைவர் மனதில் நிலைத்தவள்

அப்போது தலையில் விறகைச் சுமந்தவள்
இன்று அனைவரையும் தன் மனதில் சுமக்கிறவள்
இவர்களே நம் தாய்த்திரு நாட்டின்
நம்பிக்கையான வலிமை கொண்ட இரும்புத் தூண்கள்
பெண்மணியாக விளங்குகின்றாள்

கு. முத்துமணி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## வாழ்க்கை

எனக்கென வந்தவனே!!
எனக்கெனப் பிறந்தவனே!!
என்னையே எனக்குள் அறிமுகப்படுத்தியவனே
என்னைத் திருடி
உனக்குள் ஒளித்து விட்டாய்
நடை பிணமாய் இங்கு நான்
நடப்பதை உணராமல் அங்கு நீ...
உனக்கென வாழ்வேன்
உயிரையும் கொடுப்பேன்
உன்னோடு வாழ உலகையும் எதிர்ப்பேன்
கண்ணீரில் கிடக்கிறேன்
உன் கை என்துணை தேட
காலங்கள் தாழ்த்துவது ஏனடா கண்ணா!!

மு.உமாமகேஸ்வரி
இளங்கலை தமிழ் முதலாமாண்டு

## தமக்கை

கர்ப்பம் தரிக்கவில்லை
குழந்தையும் சுமக்கவில்லை
ஆனாலும்
தாயாக வாழ்கிறேன்
என் தங்கையே
என் கையில் சுமந்த
காலம் முதல்
இந்தப் பூமிக்கு இன்னொரு
உயிரை கொண்டுவர
தன் உயிரை பனையம் வைக்கும்
அன்னையின் இன்னொரு அவதாரம்
தமக்கை

சி. வினிதா
இளங்கலைத்தமிழ் இராண்டாமாண்டு

## போராட்டமே வாழ்க்கை

யானைகள் வாழும் பூமியில்தான்
எறும்புகளும் வாழ்கின்றன
பூனைகள் வாழும் வீடுகளில் தான்
எலிகளும் வாழ்கின்றன
சிறுத்தைகள் வாழும் காடுகளில்தான்

மான்களும் வாழ்கின்றன
சுறாக்கள் வாழும் கடலில்தான்
மீன்களும் வாழ்கின்றன
பாம்புகள் வாழும் வயல்களில் தான்
தவளைகளும் வாழ்கின்றன
வாழ்க்கை என்பது
ஏய்த்துப் பிழைப்பதல்ல
போராடி ஜெயிப்பது......

சி. வினிதா
இளங்கலைத்தமிழ் இராண்டாமாண்டு

## வாழ்க்கை

ஆயிரம் முறை
உன் வாழ்க்கை
உன்னை அழவைத்தால்
ஆயிரம் வழிகளில் - நீ
சிரிப்பதற்கு வழிதேடு
அறியாமையுடன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட
அறிவுடன் ஒரு நாள் வாழ்வது மேல்
இதுவரை நடந்ததை யோசிப்பதைவிட
இனி எப்படி நடக்க வேண்டும் என
யோசிப்பவர்களே வாழத் தெரிந்தவர்கள்
நீ கொடுக்கக்கூடிய தண்டனை
அவர்கள் கண்முன் நீ
மகிழ்வுடன் வாழ்வது மட்டுமே.......

இரா. தீபா
இளங்கலைத் தமிழ் இராண்டாமாண்டு

# சுதந்திரத் தியாகிகள்

சதிக்கு கால் முளைத்து
சாதி ஆனதோ
மதத்திற்கு மதம் பிடித்து
மரணம் ஆகின்றதோ
இதுவா சுதந்திரம்?
சாதியா நம் ஒருமைப்பாடு?
மதமா நம் ஒற்றுமை?
உண்மைதான்
நம் பண்பு
உழைப்புதான்
நம் தெம்பு?
அன்பு ஒன்று தான்
நம் பிணைப்பு
நடத்திய போராட்டங்கள்
பசிக்கவே இல்லை...
வாங்கிய தடியடிகள்
வலிக்கவேயில்லை...
சிந்திய ரத்தத்தை
உணரவே இல்லை...
இழந்த வீரர்களை
மறக்கவே இல்லை...

இரா. தீபா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## நட்பு

வாழத் தெரிந்தவனிடம்
வாழ்க்கை இருப்பதில்லை
பாசம் தெரிந்தவனிடம்
தாய் இருப்பதில்லை
அன்பு தெரிந்தவனிடம்
காதல் இருப்பதில்லை
உழைக்கத் தெரிந்தவனிடம்
காசு இருப்பதில்லை
உன் கூடப் பிறக்கவில்லை
உனக்கு நான் உடன் பிறப்புமில்லை
இருந்தும் உன்னைப் பிடிக்கிறது
உள்ளங்களால் ஒன்றாகி
உறவுகளில் கலந்திருக்கும்
உடன் பிறவா நாம் உறவுக்கு
இன்றல்ல நாளையல்ல
என்றென்றும் வாழ்வு உண்டு
நம் நட்புக்கு…….

ஈ.தாரணி
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## அன்பு

முட்டாள் பட்டம்
கிடைப்பதற்கு
அறிவு இல்லாமல்

இருக்க வேண்டும் என்று
அவசியமில்லை....
அதிக அன்போடு
இருந்தாலும் கிடைத்துவிடும்....
உடைந்த பொருளை
மறுமுறை ஒட்ட வைத்து
அலங்காரம் செய்தாலும்
அதன் பழைய அழகை
பெற இயலாது....
சில உறவுகளும்
அப்படித்தான்.....
உணர முடியாத சந்தோசத்தை
கொடுப்பதும்
உணர முடியாத வலியை
கொடுப்பதும்
உங்கள் மனதிற்கு
பிடித்தவர் மட்டும் தான்.........

ஈ.தாரணி
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## பெண்கள்

அடக்கமாய் அமைதியாய்
படி கூடத் தாண்டாத நீ
இன்று கடல் தாண்டி
கானகம் கடந்து காற்றை
கிழித்து நிற்கும் உன்னைக் கண்டு

வியப்பில் நிற்கவா...

உன் புகழ் இமயம் சேர்க்கவா

விண்ணளவு நீ உயர்ந்தாலும்

உனக்கென அளவு போட்டு

மாறுவாய் எல்லா உறவாகவும்

இக்காலத்திலும் எக்காலத்திலும்

உன்னாலே உயரும் இத்தேசத்தில்

ஆண்மைக்கு இணையே உன் பெண்மை

போதுமே உன் புன்முறுவல்கள்

வேண்டும் உன் புன்னகை

என்றும் என்றென்றும்...

ப.ஜீவிதா

முதலாமாண்டு இளங்கலைத் தமிழ்

## மகளிர்

மங்கையராகப் பிறந்து

மக்கள் மனதில் வாழ்ந்து

மனித வாழ்க்கைக்குத்

தூண்களாக இருக்கும்

பெண்களே.... பெண்டிர்களே.... மகளிர்களே....

மனிதனை மனிதனாக வாழ வைப்பது பெண்களே

பெண்கள் இல்லா இவ்வுலகம்

நீரற்ற கடல் போல் காட்சியளிக்கும்

பெண்கள் பூட்டுக்குச் சாவிபோல

அதனை திறப்பதற்கும் பூட்டுவதற்கும்

சாவியாக இருப்பது பெண்களே....

பெண்களே நாட்டின் ஆதாரம்

பெண்களே நாட்டில் உயர்ந்தவர்கள்

பெண்களை மதிப்போம்... காப்போம்....

ஆ. சௌமியா

முதலாமாண்டு இளங்கலைத் தமிழ்

## தாயின் அன்பு முத்தம்

நான் கருவறையில்
உதித்த பொழுதே
உறக்கம் களைந்து
என் பாதத் தீண்டலை
தொட்டு ரசித்து
புன்னகை பூத்து
விழியைக் காக்கும் இமையாக
மாதம் பத்து சுமந்து
என் பிறப்பில்
கொடுத்த வலியை
சுகமாக ஆனந்தக்
கண்ணீர் கொண்டு
என்னைக் கைகளில் அள்ளி
பஞ்சு கண்ணங்களில் வைத்த
அந்த அன்பு முத்தம்
என் வாழ்நாளில்
நான் இழக்காத
பொக்கிஷம்.......

ப. சசி

இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## மகளிர்

கரு தனில் மங்கையராய் பிறந்து
வயிற்றில் குழந்தைகளைச் சுமந்து
மார்பில் கணவனைத் தாலாட்டி
முதுகில் குடும்பச் சுமைகளைத் தாங்கும்
மங்கையரே
உலகின் ஆதிஅந்தம் நீயே...

மு. உமாமகேஷ்வரி
முதலாமாண்டு இளங்கலைத் தமிழ்

## கல்வெட்டியல்

'கல்வெட்டியல்' என்பது தொல் பயண ஆய்வு ஆகும். இதன் மூலம் தொல் பழங்கால மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ளலாம். கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் வாயிலாக பழம்பொருட்களை கண்டறிந்து அதனைப் பாதுகாத்து பழமையான செய்திகளை அறிந்து கொள்ளலாம். பழம் பொருட்களைக் கண்டு பிடிப்பதில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையைச் சார்ந்தவர்கள் முனைப்புடன் உள்ளனர்.

இந்தியாவின் தொல்லியல் தந்தை இராபர்ட் புரூஸ்பட். இவர் 1863 இல் சென்னையில் உள்ள பல்லாவரம் அருகே பழைய தற்கால கருவியை கண்டுபிடித்தார். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொல்லியல் துறை உருவாக்கப்பட்டது. 1784 இல் வில்லியம்

ஜோன்ஸ் ஆசிய கழகம் (Asia society) என்பதை உருவாக்கினார். இதில் பத்திரிக்கைகளும் வெளியிடப்பட்டன. இந்தப் பத்திரிக்கையில் இந்தியாவின் பழமையான நாகரிகம், ஆரம்ப கால இலக்கியம், கோயில்கள், கலைகள், அவற்றின் பெருமைகள் வெளியிடப்பட்டன. 1860 இல் ஜெனரல் கண்ணிங் ஹாம் இந்தியத் தொல்லியல் பரப்பில் ஆய்வு செய்தார். இதன் பிறகே 1898 இல் 19 ஆம் நூற்றாண்டில் இந்தியா பழமையான நாடு என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்தத் துறையை ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கின்றனர். அவை மேற்கு மண்டலம், கிழக்கு மண்டலம், தெற்கு மண்டலம், வடக்கு மண்டலம், எல்லைப்புற மண்டலம் ஆகும்.

மோ.சோனியா

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## பொன்மொழிகள்

❖ மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.

❖ உனக்கு எது தேவையோ அது தர்மம்.

❖ கஷ்டங்கள் மட்டும் இல்லை என்றால் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும்.

❖ எந்தவொரு அறிவுள்ள முட்டாளும் விஷயங்களை பெரிதாகவும் சிக்கலானதாகவும் செய்திட முடியும். ஆனால் ஒரு மேதை மட்டுமே அவற்றை எளிதாக செய்ய முடியும்.

❖ அனைத்து மதங்களும், கலையும், அறிவியலும் ஒரே மதத்தின் கிளைகள்.

சீ. மோகனப்பிரியா

இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## பெரியாரின் சுவரொட்டி

விருநகர் தொகுதியில் கடைசியாகப் போட்டியிட்ட போது தி.மு.கவை சேர்ந்த இளைஞர் சீனிவாசனிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார் காமராஜர். அப்போது திமுகவினர் 'படிக்காத காமராஜரை படித்த சீனிவாசன் வெற்றி கொண்டார்' எனச் சுவரொட்டிகள் ஒட்டினர். அதற்குப் பதிலாக ஒரே ஒரு சுவரொட்டி அதே பகுதிகளில் ஜொலித்து சிந்திக்கவும் வைத்தது. அட 'படிக்காத காமராஜர் கட்டிய பள்ளியில் படித்த சீனிவாசன் வெற்றி பெற்றார். அதற்கு வாழ்த்துக்கள் என்று அந்த சுவரொட்டியை ஒட்டியது தந்தை பெரியார்.

தனசேகர்
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## செவிலியர் தினம் - மே 12

உலக மக்களுக்குத் தனது தன்னலமற்ற தொண்டினைப் புரியும் செவிலியர் நம்மை பெற்றெடுக்காத அன்னையர் ஆவார். செவிலியரின் உன்னதத் தொண்டினை அங்கீகரிக்கும் வகையில் ஆண்டுதோறும் மே - 12 ஆம் நாள் சர்வதேச செவிலியர் தினம் (International Nurses Day) கொண்டாடப்படுகிறது.

நவீன செவிலியர் முறையை உருவாக்கியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார். இவர் பிறந்தநாளான மே 12 ஆம் நாள் செவிலியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

போரில் காயம்பட்ட வீரர்களுக்கு முதலுதவி செய்யும் பொருட்டு இரவு நேரங்களில் கைகளில் விளக்குடனே சென்று தொண்டு புரிந்த காரணத்தால் இவரை ‘கைவிளக்கேந்திய காரிகை’(The Lady with the Lamp) எனப் போற்றினர். இன்றளவும் செவிலியர் தினத்தில் லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் சம்பிரதாயப் பூர்வமாக செவிலியர் மாளிகையில் உள்ள விளக்கு ஏற்றப்பட்டு, அங்கு வரும் செவிலியர் ஒவ்வொருவரும் கை மாற்றப்பட்டுப் பின் உயர்ந்த பீடத்தில் வைப்பர். உடல்நிலை மோசமான, நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு சொந்தங்களே முகம் சுளிக்கும் பணிகளையும் செவிலியர் செய்வர். செவிலியர்களாகிய அன்னையர்களின் தொண்டினை வாழ்த்தி வணங்குவோம்.

முனைவர் ப.பிரதீபா
தமிழ் உதவிப் பேராசிரியர்

## மனித வாழ்விற்கு கணிதம் கூறும் பத்து கட்டளைகள்

நல்லவைகளைக் கூட்டிக் கொள்ளுங்கள் (கூட்டல்)
தீயவைகளைக் கழித்துக் கொள்ளுங்கள் (கழித்தல்)
அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள் (பெருக்கல்)
நேரத்தை வகுத்துக் கொள்ளுங்கள் (வகுத்தல்)
இன்பங்களையும் துன்பங்களையும் சமமாகக் கருதுங்கள் (சமம்)
செலவை குறைத்து வரவை பெருக்குங்கள் (லெஸ்தன்)
அன்பை பெருக்கி ஆணவத்தை குறையுங்கள் (கிரேட்டர்தன்)

வாழ்க்கை முடிவுள்ளது. எனவே முடிந்த வரை மற்றவர்களுக்கு உதவுங்கள் (அடைப்புக்குறி)

கடுமையான உழைப்பினால் வளர்பிறை போல வளருங்கள் (சம்மேசன்)

பிறரை மட்டும் நம்பி வாழும் வாழ்வு நிலையற்றது

(பிளஸ் ஆர் மைனஸ்)

அ.பிரதீபா

இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## கவிதைகள்

### தாய்மொழியான தமிழ்மொழி

அன்று தாய்
உணவு ஊட்டி
பாடத்தைக் கற்றுத் தந்தாள்
அதோ நிலா என்னும்
தாயின் மொழியில்...
அன்பில் நனைந்து
மொழியில் சிறகடித்து
அணைக்கிறாள் தாய் ...
தமிழின் அன்னையை
நான் கண்டதில்லை...
என் தாய்மொழியில் கண்டேன்
என் தமிழன்னையை...

உன் மொழியே
உன் அடையாளம் - அது
உன் தாய்மொழியான
தமிழ் மொழியில் உள்ளது...
உன்னை நினைத்தால்
உயிர்நாடி நடிக்கவில்லை துடிக்கிறது....
பிறந்தவுடன் நாம்
சிணுங்கும் அழகு
தமிழ் மொழியில்...
பேசும் முதல்
வார்த்தை அழகு
“அம்மா”....
பிறந்து வாழும் காலங்களில்
அவமானப்பட்டுக் கிடந்த காலம்
எண்ணற்றவை
அந்த மகிழ்ச்சி, துன்பம்
எத்தனை வேண்டுமானாலும்
வரட்டும் அதுவும்
என் தமிழ் மொழியில்....
தாய்க்கு இணையான மொழி...

எம்மொழியில் உண்டு?
எம் கலாச்சாரத்தைப் போல்
பண்டிகைகளைப் போல்!
பிறப்பும், இறப்பும்
என் தமிழ்
சடங்கில் முடியும்....

தார தப்பட்டை காது குளிர
என் இறப்பிலும்
என் தமிழ்
மொழியை வணங்கிச் சாவேன் ....
என் மொழியான
தமிழ் மொழி போல்
நான் எங்கும், எம்மொழியையும்
நான் கண்டதில்லை....
நிமிர்ந்து வாழும்
என் தாய்மொழியே
தமிழ்மொழி...

**மு. உமாராணி**
**இயங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## பெண்ணின் பெருமை

பெண் என்பவள்
தாய் தந்தைக்கு மகளாக இருந்து
பின் அறிமுகமில்லாத ஒருவனுக்கு
மனைவி ஆகிறாள்
பிறகு
ஒரு குழந்தைக்கும்
தாய் ஆகிறாள்.
பெண்ணானவள் பிறப்பு முதல்
இறக்கும் காலம் வரை
பல துன்பங்களைச் சந்தித்தாலும்
சாதனை படைக்கின்றாள்

இது தான்
பெண்ணின் பெருமை
பெண்மையைப் போற்றுவோம்.

வ. பாரதி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## அப்பா

அள்ளித்தர இல்லையென்றாலும்
தன்னிடம் இருந்து
அன்பைக் கிள்ளித் தராத
சுனை ஊற்று என் அப்பா....
என் எதிர்காலம் பற்றி
யோசித்ததில் அப்பப்பா
மிகப் பெரிய ஆச்சரியம்
என் அப்பா....!

இரா. தீபா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## பெண்மை

பெ என்னும் வல்லின
எழுத்தில் தொடங்கி
மை என்னும் மெல்லின
எழுத்தில் முடியும்
ஓர் அழகான
வார்த்தை இது
பெண் என்பவள்
பிறரைத் துன்பப்படுத்துகிறாள்

என்றாலும்
மிகவும் மெல்லிய
குணமுடையவள்
தன் உயிரைக்
காணிக்கையாக்கி
புதிய உயிர் பூமிக்கு வர
வழிவிட்டு
மறு ஜென்மத்தையும்
எடுப்பவள் பெண்ணே
தன் வேலைகளை முடித்து
வேதனைகளைத் துடைத்து
குழந்தைகளின் வழிகாட்டியாய்
கலங்கரை விளக்கமாய்
நிற்பவளும் அவளே
பெண் வாழ்நாள்
முழுவதும்
செருப்பாய் தேய்ந்து
முள் என்ற தடைகளை
உடைத்து
முன்னேறுகிறாள்.

**க. ரஞ்சூரியா,**
**தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**